குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.9/2024

ம.சா. 2

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14–ம் தேதி செவ்வாய் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நிரஞ்சன்பிரபு | தொழில் | |
| தந்தை பெயர் | மதியழகன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.55 மணி,

Complainant Saravan present. Advocate Mr.Sanchukumar present for Complainant. Accused Prabharakaran present. Advocate Mr.Geminishankar present for Accused.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) ஆஜர் எதிரியை எப்படி தெரியும் என்றால் எனது ஊரில் மெடிக்கல் வைத்திருந்தார். ஆஜர் எதிரியின் சொந்த ஊர் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர். நான் பொறியியல் முடித்துவிட்டு, MBA படித்துவிட்டு தற்போது ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு நன்கு தெரியும் என்று நான் சொல்லியுள்ள நிலையில் அவரை எந்த வகையில் தெரியும் என்றால் எனது ஊரில் 20 வருடங்களாக மெடிக்கல் வைத்து இருந்தார்.

2) ஆஜர் எதிரி முத்துநாயக்கன்பட்டியில் மெடிக்கலை மூடிவிட்டு வேறு ஊருக்கு போன விபரம் பற்றி தெரியும் என்றால் சரி. ஆஜர் எதிரி கடந்த 2018 ம் ஆண்டில் வேறு ஊருக்கு சென்றுவிட்டார். என்ன காரணத்திற்காக ஊரைவிட்டு சென்றார் என்றால் தெரியாது. புகார்தாரிடம் கடன் பெற்றதை போல முத்துநாயக்கன்பட்டியில் பலரிடம் ஆஜர் எதிரி கடன் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி இந்த ஊரை விட்டு சென்ற பிறகு எங்களுக்குள் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல, ஆஜர் எதிரியும் நானும் ஒன்றாக சேர்ந்து மல்லமூப்பம்பட்டியில் மெடிக்கல் சாப் வைத்தோம். தற்போதை வரை மேற்படி மெடிக்கலை நடத்தி வருகிறேனா என்றால் அந்த தொழிலில் எனக்கு அனுபவம் இல்லாததால் ஆஜர் எதிரியிடம் ஒப்படைத்துவிட்டேன்.

3) மேற்படி மெடிக்கலை தவிர தனியாக நான் ஒரு மெடிக்கலை மாமாங்கத்தில் 2019 ஜுன் மாதம் திறந்தேன், ஆனால் 5 வருடம் நடத்திய பின் 2024 ம் ஆண்டு மூடிவிட்டேன். ஆஜர் எதிரிக்கும் எனக்கும் இடையே இருந்த தொழில் ரீதியான சங்கதிகளை எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரி. புகார்தாரரின் நகை கடைக்கு நான் அடிக்கடி சென்று வருவதன் அடிப்படையில்

அவர்களுக்குள் இருந்த பரிவர்த்தனை எனக்கு தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரி. கடந்த 15.10.2023 ம் தேதி அன்று ஆஜர் எதிரி மெடிக்கலை விரிவு படுத்துவதற்காக மற்றும் குடும்ப செலவுகளுகாகவும் புகார்தாரரிடம் இருந்து பணம் வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளேன். மேற்படி தேதிக்கு முன்பாகவே ஆஜர்எதிரிக்கும் புகார்தாரருக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்தது பற்றி தெரியும் என்று எனது சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) ஆஜர் எதிரி புகார்தாரருக்கு கொடுத்த காசோலை எந்த வங்கியுடையது என்றால் ஆக்ஸிஸ் வங்கியுடையது என்று நினைக்கிறேன். இவ்வழக்கு காசோலையை ஆஜர் எதிரி புகார்தாரரின் கடைக்கு வந்த பின் கையொப்பம் செய்தார் என்றால் ஏற்கனவே நிரப்பப்பட்ட காசோலையை எடுத்து வந்து புகார்தாரரின் கடையில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தார். ஆஜர் எதிரிக்கும் எனக்கு இடையே கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக ஏதாவது பத்திரம் எழுதினோமா என்றால் எழுதினோம். எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் ஜனவரி 2023 ம் ஆண்டு எழுதப்பட்டது.

5) ஆஜர் எதிரியும் நானும் கூட்டாக சேர்ந்து மெடிக்கல் நடத்தினோம் என்றால் முத்துநாயக்கன்பட்டி மெடிக்கல் கடையின் உரிமம் தங்களுடைய பெயரில் இருந்ததா என்றால் ஆஜர் எதிரியின் சகோதரரின் பெயரில் கடையின் உரிமம் இருந்தது. ஆஜர் எதிரிக்கும் எனக்கும் தொழில் ரீதியான பிரச்சனை வந்துள்ளது என்பதால் ஆஜர் எதிரிக்கும் எனக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனைக்காக எதிரிக்கு பாதகமாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது ஊரை சேர்ந்தவர் மற்றும் தெரிந்தவர் என்பதாலும் ஆஜர் எதிரி வெளியூரை சேர்ந்தவர் என்பதாலும் புகார்தாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி புகார்தாரரிடம் எந்த தொகையும் வாங்க வில்லை என்றால் சரியல்ல, நான் இருக்கும் சமயத்தில் தான் எதிரி புகார்தாரரிடம் இருந்து பணத்தை வாங்கினார். பணத்தை பெறுவதற்கு முன்பாகவே காசோலையை யாரும் நிரப்பி எடுத்து வரமாட்டார்கள் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.18 மணி.

Sd./S.Sadhamhusain,
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.